நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**CC. No.362/2025**

**P.W.7 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | விக்னேஸ்வரமூர்த்தி |
| தந்தை / கணவர் பெயர் | : | ஈஸ்வரன் |
| கிராமம் | : | குள்ளக்கவுண்டனூர் |
| வட்டம் | : | ஓமலூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW7** |
| வயது | : | 32 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், மார்ச் மாதம், 18–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**(கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் பணிமாறுதலாகி சென்றுவிட்டபடியால் இந்த நீதிமன்றம் தாமாக சாட்சியை விசாரணை செய்து சாட்சியம் பதிவு செய்தது)**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 1.46 P.M.)

1. நான் தற்போது ஆத்தூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் காவல் உதவி

ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.09.2020–ம் தேதி 18.00 மணிக்கு மதுவந்தி(26), க/பெ.ரங்கசாமி என்பவரிடம் பெற்று வந்த வாக்குமூலத்தின் பேரில் நிலைய மனு ரசீது எண்.87/2020 கொடுக்கப்பட்டு, பரிசீலணைக்கு எடுத்துக்கொண்டு, 19.09.2020–ம் தேதி 18.00 மணிக்கு மேட்டுர் காவல் நிலைய குற்ற எண்.538/2020, சட்ட பிரிவுகள் 294(b), 323 இதச வாக வழக்கு பதிவு செய்து காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் வேணுகோபால் என்பவர் முதற்கட்ட விசாரணை முடித்து எனது பார்வைக்கு வைத்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கில் மதுவந்திக்கு சிகிச்சை அளித்து காயச் சான்று வழங்கிய அரசு மருத்துவ அதிகாரி திரு.பிரசாந்த் அவர்களை 06.10.2020–ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(14.09.2020–ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட புகார் மனு ரசீது அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2. மற்ற சாட்சிகள் ஏற்கனவே முதற்கட்ட விசாரணை அதிகாரியிடம் கூறியது போலவே சொன்னதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. அன்றைய தினமே வழக்கில், முதற்கட்ட விசாரணை செய்த காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் வேணுகோபால் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரி ரங்கசாமியின் மீது 06.10.2020–ம் தேதி சட்ட பிரிவுகள் 294(b), 323 இதசவின் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

3. சி.எஸ்.ஆர் மனுவில் எதிரியை அழைத்த விவரம் பற்றி நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் நான் தெரிந்து கொண்டேன். சி.எஸ்.ஆர் மனுவின் பேரில் எதிரியை அழைத்து விசாரணை செய்துள்ளனர். அப்போது வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யப்பட்டதாக எனது விசாரணையில் தெரிவிக்கவில்லை. இந்த வழக்கில் மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலின் அடிப்படையில் புகார் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

4. புகார் வாக்குமூலம் 14.09.2020–ம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை 19.09.2020–ம் தேதி பதிவு

செய்யப்பட்டுள்ளது. தகவல் பெற்ற பின்னிட்டு ஐந்து நாட்கள் காலதாமதமாக தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஐந்து நாட்கள் காலதாமதாக பதிவு செய்ததற்கு கணவன், மனைவிக்கு இடையேயான பிரச்சனை என்பதால் முன்விசாரணை மேற்கொண்டு, அதன் பின்னிட்டு வழக்கு பதிவு செய்தோம்.

5. மேற்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுவதற்கு முன்பாக உள்ள சி.எஸ்.ஆர் ரசீதை தவிர வேறு எந்த ஆவணங்களையும் நான் தாக்கல் செய்யவில்லை. சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் நேரத்தில் புகார்தாரர் சம்பவ இடத்தில் இருந்தார் என்பதை அறியும் பொருட்டு விசாரணை எதுவும் நான் மேற்கொண்டேனா என்றால், அது குறித்து சம்ப இடம் சென்று விசாரணை செய்தேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் தேதி, நாள், நேரம் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

6. என்னுடைய விசாரணையில் புகார்தாரர் 9.45 மணிக்கு உள்நோயாளியாக மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார் என்றாலும், சம்பவம் 8.30 மணிக்கு நடைபெற்றது என்றாலும் சரிதான். புகார்தாரரின் வீட்டிற்கும் மருத்துவமனைக்கும் இடையே சுமார் ½ கி.மீ தூரம் இருக்கும். புகார்தாரரின் வீட்டிலிருந்து மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு செல்ல 5 நிமிடத்தில் சென்றுவிடலாம். இந்த வழக்கிற்கு முன்பாக புகார்தாரருக்கும், எதிரிக்கும் இடையே குடும்ப வன்முறை வழக்கு மற்றும் விவாகரத்து வழக்கு உள்ள விவரங்களை நான் தெரிந்து கொண்டேன்.

7. இந்த வழக்கில் சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்ட நபர்கள் புகார்தாரரின் வீட்டிற்கு அருகில் குடியிருப்பவர்களா அல்லது அவரது உறவினரா என்று விசாரித்து தெரிந்து கொண்டேன். சாட்சிகள் அவரது வீட்டிற்கு அருகில் குடியிருப்பவர்கள் ஆவார்கள். நான் சாட்சிகளாக குறிப்பிடப்பட்டிருக்கும் நபர்கள் தனிப்பட்ட உறவினர் சாட்சிகள் இல்லை என்றால் சரியல்ல, சாட்சி 2 மற்றும் 3 புகார்தாரரின் பெற்றோர்கள் ஆவார்கள். சாட்சி 4 மற்றும் 5 வீட்டிற்கு அருகில் குடியிருப்பவர்கள் ஆவார்கள். சாட்சி 6 மற்றும் 7 சம்பவத்தை நேரில் பார்த்த தனிப்பட்ட சாட்சிகள் ஆவார்கள்.

8. புகார்தாரர் கொடுக்கப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில்தான் இந்த வழக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரியை விசாரணை செய்த பின்னிட்டுதான் குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன். எதிரியிடமிருந்து நான் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. அதற்கான ஆவணம் எதுவும் என்னிடம் இல்லை. அ.சா.ஆ.2 மாதிரி வரைபடத்தில் உள்ள வீடுகளின் உரிமையாளர்களாக குறிப்பிடப்பட்ட நபர்கள் யாரையும் நான் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

9. சம்பவத்தின் போது எதிரி வீட்டிற்கு வெளியே வாசலில் பிரச்சனை செய்ததாகதான் அ.சா.ஆ.2 மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.1 மதுவந்தி எதிரி வீட்டிற்குள் வந்து பிரச்சனை செய்ததாக சொல்லியுள்ளார் என்றால் வீட்டிற்கு வந்து பிரச்சனை செய்ததாகதான் கூறியுள்ளார். குறிப்பாக உள்ளேயா அல்லது வெளியிலா என்று சொல்லவில்லை. இந்த வழக்கில் அ.சா.1 மதுவந்தியை தவிர அவரது உறவினர்கள் அக்கம்பக்கத்தினர் யாரும் புகார் அளிக்கவில்லை.

10. சம்பவம் நடைபெற்ற பகுதி நிறைய வீடுகள் உள்ள பகுதி என்றால் சரிதான். புகார்தாரரின் வீட்டை சுற்றி உள்ள சி.சி.டிவி கேமராக்கள் குறித்து விசாரணை செய்யவில்லை. புகார்தாரருக்கும், எதிரிக்கும் குடும்ப சம்மந்தப்பட்டபிரச்சனை இருந்து வருவதாலும், அவர்கள் இருவரும் ஐந்தாண்டுகளாக பிரிந்து வாழ்ந்து வருவதாலும் பொய்யாக கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டதை நான் சரிவர விசாரணை செய்யாமல் இந்த தவறான இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

(விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 2.25 P.M.)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**